**பாத்ததும்பற பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும் திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2017 யூன் 16 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டின் கணக்காய்வுக் கட்டணங்களுக்காக கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) யப்பான் தொழில்நுட்ப சேதனப் பசளை செயற்திட்டத்திற்காக நன்கொடையாக கிடைத்திருந்த இயந்திரங்களை சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்குரிய ரூபா 5,798,287 ஆன வங்கிப் பிணைப்பொறுப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

வீதிகளை விரிவுபடுத்தல், மதில்களை உடைத்து அகற்றுதல் மற்றும் மதகுகளைதடைசெய்தல தொடர்பாக 11 வெளித்தரப்பினர்கள் சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்திருந்த போதிலும் கணக்குகளில் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

#### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 36,908,481 தொகையான 8 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் பயன்பாட்டு பட்டோலைகள் மீதிகளுக்கு இடையே ரூபா 24,433,443 தொகையான வேறுபாடு கண்டறியப்பட்டது.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 6 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,390,628 ஆக இருந்ததுடன். அவற்றில் 1-5 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,089,127 உம் 5 வருட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 11,301,501 ஆக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட 2 கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,342,879 ஆக காணப்பட்டது. அவற்றில் 1 வருட காலத்திற்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,491,813 ஆக இருந்தது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் ரூபா 28,233,339 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 126(vii)ஊ பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பர அறிவித்தல் பதாகை தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமையால் ரூபா 179,500 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 762 | தேவைப்பாட்டின் பிரகாரம் பொருட்கள் கொள்வனவு செய்யப்படாமல் ரூபா 1,600,040 ஆன நீர் உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டன. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,993,024 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 31,271,762 ஆகக்

காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி விளைவுகளில் ரூபா 19,278,738 ஆன வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது.

**2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு**

நிதி விளைவுகளில் ரூபா 19,278,738 ஆன வீழ்ச்சிக்கு ஏனைய வருமான விடயங்களில் ரூபா 18,989,760 ஆன குறைவு பிரதான காரணமாக இருந்தது.

**2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் மொத்த நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் மொத்த நடைமுறைப் பொறுப்புகளுக்கிடையே விகிதங்கள் 1:8:1 மற்றும் 2.5:1 என்ற வகையில் இருந்தன.

**2.4 வருமான நிருவாகம்**

**2.4.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) பிரதேச சபைக்குரிய இயந்திர உபகரண பிரிவொன்று ஸ்தாபிப்பதற்கு வழங்கப்பட்ட இயந்திர உபகரணங்களலிருந்து வருமானத்தை அதிகரித்துக் கொள்வது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேசத்தில் உள்ள பாரிய வியாபார மற்றும் வியாபார நிறுவனங்களிலிருந்து கழிவு வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.2 வீதவரி**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 3,390,518 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் ஆண்டில் பட்டியல் இடப்பட்டவை ரூபா 5,580,364 ஆக இருந்தது. ஆண்டில் அறவிடல் சதவீதம் நிலுவை மீதியில் 47 சதவீதமும் ஆண்டில் பட்டியலிடலில் 59 சதவீதமாகவும் இருந்தன. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 4,061,470 ஆக இருந்ததுடன் அம்மீதிகளில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியருந்த மீதிகளின் பெறுமதி ரூபா 1,799,065 ஆக இருந்தது.

**2.4.3 குத்தகை வாடகை**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 401,331 ஆன நிலுவை மீதிகளில் ரூபா 73,640 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது நிலுவை மீதியில் 18 சதவீதமாக இருந்தது.

**2.4.4 ஏனைய வருமானம்**

**நீர்க் கட்டணங்கள்**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 382,701 ஆன நிலுவை மீதிகளில் ஆண்டினுள் ரூபா 170,148 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது நிலுவை மீதியில் 44 சதவீதமாக இருந்தது.

**2.4.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,101,819 உம் முத்திரைக் கட்டணம் ரூபா 17,684,093 உம் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

மடவள வர்த்தக தொகுதியின் கட்டமைப்பு திட்டத்தை வெற்றிகரமான பொது வர்த்தக தொகுதியொன்றாக்குவதற்கான தகைமை இல்லாமை காரணமாக கீழ் மாடி எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் மூடப்பட்டிருந்ததுடன் இத்தொகுதியை பயன்படுத்தக்கூடிய வகையில் அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) 2015 ஆம் ஆண்டின் போது பாத்ததும்பர பிரதேச சபையின் இறைச்சிக்கடையை நடாத்திச் சென்ற குத்தகையாளரால் குண்டசாலை அதிகாரப்பிரதேசத்தில் தனியான இறைச்சிக் கடையொன்றை நடாத்திச் சென்றமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 2,635,247 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான 10 கடைகளில் 2015 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் 3 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை அறவிடாத காரணத்தினால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான மடவள நகரில் அமைந்துள்ள 89 சதுர அடி அளவிலான 2 கடைகள் 2013 ஆம் ஆண்டு முதல் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் மூடப்பட்டிருந்தமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**3.3 செயற்பாட்டு திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) உள்ளூராட்சி ஆணையாளரினதும் உள்ளூராட்சி மன்ற அமைச்சிலிருந்தும் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,443,194 தொகை 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) மடவள வர்த்தக தொகுதியின் கடைகள் 2014 ஆகஸ்ட் 11 ஆந் திகதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் மதிப்பீட்டு வாடகை அறவிடப்படாத காரணத்தினால் ரூபா 244,200 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான ரூபா 3,480,000 பெறுமதியான RD - 6660 ஆம் இலக்க களி பவுசர் மற்றும் ரூபா 3,000,000 பெறுமதியான எஸ்கவேட்டர் என்பன எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் சபை வளவிலும் கழிவுப்பொருள் இடும் வளவிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

### 3.4 விளைவற்ற / குறைப்பயனபாட்டிலான சொத்துக்கள்

ரூபா 1,260,000 பெறுமதியான 3 வாகனங்கள் 08 ஆண்டு காலமாக விளைவற்ற வகையில் காணப்பட்டதுடன், அவ்வாகனங்களை திருத்தியமைப்பதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 தாமதமான செயற்திட்டங்கள்

2016 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 325,000 பெறுமதியான 4 நிர்மாண வேலைகள் 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

நாளாந்தம் சேரும் 2 தொன் அளவிலான கழிவுப்பொருட்கள் சபையின் ஊழியர்கள் மற்றும் உழவு இயந்திரம் என்பவற்றைப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்டு உக்கலடையும் மற்றும் உக்கலடையாத என வேறுபடுத் குண்டசாலை கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ நிலையத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றிற்கிடையே நிதிஏற்பாடு மாற்றப்பட்டதன் பின்னரும் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கிடையே கருத்திற் கொள்ளக்கூடியளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லையென்பது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 46 வருமான விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 5,346,000 ஆன முழுஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 6 செலவின விடயங்களில் தேறிய ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 11 சதவீதம் முதல் 72 சதவீதம் வரையான வீச்சில் விலகல் காணப்பட்டன.

(இ) 6 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கிடையே 6 சதவீதம் முதல் 55 சதவீதம் வரையான வீச்சில் விலகல் காணப்பட்டன.

### 4.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக ரூபா வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்விற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தருக்கு வேறு கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்த காரணத்தால் போதியளவில் உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது.

**4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 3 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) கணக்கீடு
(இ) வாகன நிர்வாகம்
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்
(ஊ) ஒப்பந்த நிர்வாகம்